தூத்துக்குடி மாவட்ட அண்ணா சங்கு குளி தொழிலாளர் சங்கத் தலைவர் இசக்கிமுத்து மற்றும் சுவாமி விவேகானந்தர் நகர் ஊர் தலைவர் முருகன் ஆகியோர் ஏற்பட்டில் சுவாமி விவேகானந்தர் நகர் பகுதியைச் சேர்ந்த மணிராஜ், மாரிச்செல்வம், சுந்தரலிங்கம், சூர்யா, வெற்றி வேல், லட்சுமி, தம்பு லட்சுமி, பாண்டி, வீரப்பெருமாள் உள்ளிட்ட சுமார் 100 பேர் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சரும் தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளருமான திருமதி. கீதாஜீவன் முன்னிலையில் தங்களை தி.மு.க.வில் இணைத்துக் கொண்டனர். தூத்துக்குடி கலைஞர் அரங்கில் நடைபெற்ற இந்நிகழ்வில் மாநகர தி.மு.க. செயலாளர் ஆனந்தசேகரன், மாமன்ற உறுப்பினர் திருமதி. ஜெயசீலி, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் அபிராமிநாதன், மாவட்ட மருத்துவர் அணி தலைவர் அருண்குமார், மாநகர இளைஞரணி அமைப்பாளர் அருண் சுந்தர், தோள்பேட்டை பகுதி பொருளாளர் உலகநாதன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

ஸ்பெயினில் கனமழை:

மாட்ரிட், நவ. 4 -

ஐரோப்பிய நாடான ஸ்பெயினில் கனமழை கொட்டித்தீர்த்தது. இதனால் அங்குள்ள பல மாகாணங்கள் வெள்ளத்தில் மிதக்கின்றன.

ஓராண்டு பெய்ய வேண்டிய மழை சில மணிநேரங்களில் கொட்டித்தீர்த்தது. அந்நாட்டின் கஸ்டிலா லா மஞ்சா, அண்டலுசியா ஆகிய நகரங்களிலும் கனமழை பெய்தது. கனமழை காரணமாக பல்வேறு ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. வெள்ளம் நகரின் பல்வேறு பகுதிகளை சூழ்ந்தது. வெள்ள நீருடன் சேறும் வீடுகளை சூழ்ந்தது. இதன் காரணமாக பொதுமக்கள் பெரும் அவதியடைந்தனர். மேலும், ஏராளமான சாலைகள் மற்றும் தண்டவாளங்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன.

பட்டிக்காடும் பட்டணமும்

பட்டிக்காடு : ஏன் தம்பி; மராட்டிய மாநிலப் பேரவைத் தேர்தலையொட்டிய பிரச்சாரத்தில் தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத்பவார், அங்கே 'பா.ஜ.க. உள்ளிட்ட மகாயுதி கூட்டணி ஆளுங்கட்சி வேட்பாளர்களுக்குப் போலீஸ் வாகனங்களில் கட்டுக்கட்டாகப் பணம் எடுத்துச் செல்லப்படுகிறது' என்று குற்றம் சாட்டி இருக்கிறாரே ?

பட்டணம் : **ஆமாமய்யா; " ஒருபுறம் கட்டுக் கட்டாய்க் கள்ள நோட்டு, மறுபுறம் எட்டாய் மடிக்கப்பட்ட கசங்கிய ஒற்றை ரூபாய் நோட்டு, இது என்ன உண்டியா, இல்லை இதுதான் ('பா.ஜ.க.வின்') இண்டியா!" என்று கவிஞர் தணிகைச் செல்வன் எழுதியது நினைவுக்கு வருகிறது!**

திண்டுக்கல் கிழக்கு மாவட்டத்தில்

வாக்குச் சாவடி நிலை முகவர்கள் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் ஐ.பி.செந்தில்குமார் அறிக்கை!

சென்னை, நவ. 4 -

திண்டுக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளர் ஐ-பி.செந்தில்குமார் எம்.எல்ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கழகத் தலைவர், தமிழ் நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆணைக் கிணங்க, கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலோடு, கழக துணை பொதுச் செயலாளரும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஆலோசனையின்படி திண்டுக்கல் கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட நான்கு சட்டமன்றத் தொகுதிகளின் வாக்குச் சாவடி நிலை முகவர்கள் (பி.எல்.ஏ.2) கூட்டம் 05.11.2024, செவ்வாய்க் கிழமை அன்று கீழ்கண்டவாறு நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் தலைமைக் கழக தேர்தல் மேற்பார்வையாளர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க வுள்ளார்கள்.

எனவே, அந்தந்த பகுதிகளில் நடைபெறும் கூட்டங்களில் மாவட்ட கழக நிர்வாகிகள், தலை மைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக நிர்வாகிகள் மற்றும் அனைத்து வாக்குச் சாவடி நிலை முகவர்களும் (பி.எல்.ஏ.2) கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

நாள்: 05.11.2024, செவ்வாய்கிழமை / நேரம் / தொகுதி ஒன்றியம் / நகரம் / பேரூர் / இடம் / தலைமை கழக பொறுப்பாளர் பற்றிய விவரம் வருமாறு:

காலை 10.00 மணி - ஆத்தூர் - ரெட்டியார்சத்திரம் வடக்கு, தெற்கு, கன்னிவாடி பேரூர், ஸ்ரீராமபுரம், அகரம், தாடிக்கொம்பு பேரூர்கள், அணைப்பட்டி ஊராட்சி -தோப்புப்பட்டி, சமுதாயக்கூடம் - கள்ளிப்பட்டி மணி, மாநில விவசாய அணி துணைச் செயலாளர்

மாலை 4.00 மணி - ஆத்தூர் - ஆத்தூர் கிழக்கு மற்றும் மேற்கு ஒன்றியம், சித்தையன்கோட்டை, சின்னாளபட்டி, அய்யம்பாளையம் பேரூர்கள்- செம்பட்டி, அன்பு மஹால் - "

காலை 10.00 மணி - பழனி - கொடைக்கானல் நகரம், மேல்மலை, கீழ் மலை மற்றும் பண்ணைக் காடு பேரூர் கொடைக்கானல், ஹமூஸ் ஹோட்டல். - அதலை செந்தில்குமார், மாநில மாணவர் அணி துணைச் செயலாளர்

மாலை 4.00 மணி - பழனி -பழனி நகரம், பழனி மேற்கு, கிழக்கு ஒன்றியங்கள், ஆயக்குடி, நெய்காரப்பட்டி, பாலசமுத்திரம் பேரூர்கள் - பழனி, மருதம் மஹால். - "

காலை 10.00 மணி - நிலக்கோட்டை - நிலக்கோட்டை தெற்கு, மேற்கு மற்றும் வடக்கு ஒன்றியங்கள், அம்மையநாயக்கனூர் மற்றும் நிலக்கோட்டை பேரூர்கள் - நிலக்கோட்டை, டெலிவோன்டவர் பின்புறம், தனவள்ளி சேகர் மஹால் - கம்பம் இரா.பாண்டியன், கொள்கை பரப்புக் குழு துணைச் செயலாளர்

மாலை 4.00 மணி - நிலக்கோட்டை -வத்தலக்குண்டு வடக்கு மற்றும் தெற்கு ஒன்றியங்கள், வத்தலக்குண்டு, பட்டிவீரன்பட்டி, சேவுகம்பட்டி பேரூர்கள் - வத்தலக்குண்டு, பெரியகுளம் ரோடு, ஸ்ரீகணேஷ் மஹால். "

காலை 10.00 மணி - திண்டுக்கல் - திண்டுக்கல் வடக்கு மற்றும் தெற்கு ஒன்றியங்கள் திண்டுக்கல், மா.மூ.கோவிலூர் பிரிவு, சந்திரா மஹால் - எம்.கோவிந்தசாமி அவர்கள், மாநில நெசவாளர் அணி துணைச் செயலாளர்

மாலை 4.00 மணி - திண்டுக்கல் - திண்டுக்கல் மாநகர நான்கு பகுதிகள் - திண்டுக்கல், ரவுண்ட் ரோடு, நாயுடு மஹால்.

இவ்வாறு ஐ.பி.செந்தில் குமார் எம்.எல். ஏ. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் க.பொன்முடி சிறப்புரை! விழுப்புரம் மாவட்டத்திற்கு வருகை தரும்

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்! பெ.சேகர் - செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

திண்டிவனம், நவ. 4 -

விழுப்புரம் மாவட்டத்திற்கு வருகை தரும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் சிறப்பான வரவேற்பளிப்பது உள்ளிட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுகநிர்வாகிகள் அவசர ஆலோசனை கூட்டம் திண்டிவனம் சென்னை தேசிய நெடுஞ்சாலையில் உள்ள ஹோட்டல் ஆர்யாசில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட அவை தலைவரும் ,செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் தலைமை தாங்கினார். மாவட்டத் துணைச் செயலாளர்கள் மரக்காணம் ரவிக்குமார், அமுதா ரவிக்குமார், அருணகிரி, ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் ப. சேகர் அனைவரையும் வரவேற்றார்.

கூட்டத்தில் கழகத் துணை பொது செயலாளர், வனத்துறை அமைச்சர் டாக்டர் க.பொன்முடி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் விழுப்புரம் மாவட்டத்தில் நவம்பர் 5, 6 ஆகிய இரு தினங்களில் நடைபெறும் கழக நிகழ்ச்சிகளிலும், அரசு நிகழ்ச்சிகளிலும் பங்கேற்க வருகை தரும் தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் திண்டிவனம் சென்னை தேசிய நெடுஞ்சாலையில் உள்ள ஹோட்டல் ஆரியாஸ் எதிரில் சிறப்பான வரவேற்பு அளிப்பது எனவும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் ஊராட்சிகளில் கழக இருவண்ண கொடியை ஏற்றி இனிப்புகள் வழங்கியும் பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கியும், ஏழைகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்பாக கொண்டாட வேண்டும்.

விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து நகர, பேரூராட்சி வார்டுகளில், கிராம ஊராட்சி வார்டுகளிலும் வாக்காளர் பெயர் பட்டியலில் புதிய வாக்காளர்கள் சேர்த்தல், நீக்குதல், பணிகளை கழக தோழர்கள் முன்னின்று செய்திட வேண்டும்.உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்ற ப்பட்டன.

கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள 3 தொகுதிகளின் பொறுப்பாளர்கள்கடலூர் இள.புகழேந்தி,ப.அப்துல் மாலிக், ஏ .ஜாபர் அலி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேதுநாதன்,சீத்தாபதி சொக்கலிங்கம், செந்தமிழ் செல்வன், தலைமை தீர்மான குழு உறுப்பினர் செஞ்சி சிவா,செயற்குழு உறுப்பினர்கள் விஜயகுமார், நெடுஞ்செழியன், சீனிராஜ், பொதுக்குழு உறுப்பினர்கள் கதிரேசன், பாலகிருஷ்ணன், வீடூர் ரவி, சாந்தி ஏழுமலை ,செல்வராஜ்,ஒன்றிய கழக செயலாளர்கள் சொக்கலிங்கம், அண்ணாதுரை, ராஜாராமன், தயாளன், பழனி, ரவிச்சந்திரன், மணிமாறன், செழியன், துரை, இளம்வழுதி,பச்சையப்பன், விஜயராகவன், நாராயணமூர்த்தி, சாந்தி சுப்பிரமணியன், பேரூர் செயலாளர்கள் கார்த்திக், சம்பத், மாவட்ட அணி அமைப்பாளர்கள் ஆனந்த்,எம். எல். பி .கோபிநாத், ராஜசக்தி,,கே செந்தில் குமார் , ப.செந்தில் குமார், டாக்டர் அசோக், கோ. தமிழரசன்,திருமலைதங்கராஜ் ஊரல்அண்ணாதுரை, விஜயராகவன் ,சந்திரன்,செந்தில் முருகன், சிவகாமி, திலகவதி, ரவிச்சந்திரன், ரோமியன், காதர் நவாஸ் ,மயிலம் ஒன்றிய பெருந்தலைவர் யோகேஸ்வரி மணிமாறன்.திண்டிவனம் நகர மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் டி.கே.பி ரமேஷ், எம்.டி.பாபு, அண்ணாமலை, விஜயகுமார், உதயகுமார்உள்ளிட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர ,பேரூர், கழக நிர்வாகிகள், நகர மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

திண்டிவனம் நகரச் செயலாளர் ஆசிரியர் கண்ணன் நன்றி கூறினார்.

ஆ.இராசா.எம்.பி - அமைச்சர் சா.சி.சிவசங்கர்- தொகுதி பார்வையாளர்கள் பங்கேற்பு!

பெரம்பலூர் மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

மாவட்டப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் அறிக்கை!

பெரம்பலூர், நவ. 4 -

பெரம்பலூர் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ. ஜெகதீசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

பெரம்பலூர் மாவட்ட செயற்குழு கூட்டம் 05.11.2024,(செவ்வாய்க் கிழமை) காலை 10.00 மணியளவில், பாலக்கரையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன்(எனது) தலைமையில், கே.என்.அருண்நேரு. எம்.பி., சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

இந்த கூட்டத்தில் கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா.எம்.பி போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகின்றனர். இதில்

பெரம்பலூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் தங்க.சித்தார்த்,

குன்னம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் ஏ.கே.அருண் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

அது சமயம், மாநில நிர்வாகிகள், தலைமை

செயற்குழு உறுப்பினர்கள், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள்,

மாவட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்!

கழகத் தலைவர் தமிழ் நாடு முதலமைச்சர் அவர்கள் பெரம்பலூர் வருகை!

தொகுதி பார்வையாளர்கள் அறிமுகம்.

வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல்.

கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

நீலகிரி மாவட்ட தி.மு.க.

நகர, ஒன்றிய, பேரூர்க் கழக செயலாளர்கள் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக் அறிக்கை!

உதகை, நவ. 4 -

நீலகிரி மாவட்டக் கழகச் செயலாளர் பா.மு.முபாரக் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

இன்று (4.11.2024 - திங்கட்கிழமை) மதியம் 3 மணி அளவில் நீலகிரி மாவட்ட நகர ஒன்றிய பேரூர் கழக செயலாளர்கள் கூட்டம், மாவட்ட தி.மு.க அலுவலகம்உதகைகலைஞர்அறிவாலயத்தில் அரசு தலைமை கொறடா கா.ராமசந்திரன் அவர்கள், தொகுதி சட்ட

மன்ற பார்வையாளர்கள் தென்றல் செல்வராஜ் (உதகை), பி.ஆர்.பரமேஸ்குமார் (கூடலூர்), மற்றும் அ.திராவிடமணி(குன்னூர்) ஆகியோர் முன்னிலையில் நடைபெறவுள்ளது. இதில் நகர ஒன்றிய பேரூர் கழக செயலாளர்கள்அனைவரும் தவறாது கலந்து சிறப்பிக்குமாறு வேண்டுகிறேன்.

குறிப்பு: தாங்கள் வரும் போது, தங்களது நகரஒன்றியபேரூர் கழகத்திற்கு உட்பட்ட BLA2 (வாக்குச்சாவடி நிலைமுகவர்கள்) தேவையிருப்பின் திருத்தப் பட்டியலை முறைபடுத்தி அவசியம் கொண்டுவர வேண்டுகிறேன்.

பொருள்: 1. தலைமை கழகஅறிவிப்பின்படி,முதற்கபட்டமாகஒவ்வொருBLA 2 வாக்குச்சாவடி முகவர்களையும் சட்டமன்ற தொகுதிபார்வையாளர்கள் அந்தந்த பகுதிக்கு நேரில் சென்றுசந்திப்பதற்கானஏற்பாடுகள் செய்வது முன் குறித்து.

2. கழக ஆக்க பணிகள்.

இவ்வாறுஅவர்அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.க

சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள் அறிமுகக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் அறிக்கை!

தருமபுரி, நவ. 4 -

தருமபுரி மேற்கு மாவட்டச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தருமபுரி மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட பாலக்கோடு, அரூர், பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதிகளுக்கான பார்வையாளர்கள் அறிமுகக் கூட்டம் இன்று (04.11.2024 -திங்கட்கிழமை) காலை 9.30 மணியளவில் காரிமங்கலம் மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட கழகத்

அவைதலைவர் திரு. கே.மனோகரன்,Ex.,MLA தலைமையில், மாவட்ட கழக துணை செயலாளர் வழக்கறிஞர்.ஆ.மணி.,எம்.பி முன்னிலையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாநில விவசாய அணி துணை செயலாளரும், பாலக்கோடு சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் டி.எம்.அரியப்பன் அவர்களையும், மாநில அமைப்புச்சாரா ஓட்டுநர் அணி துணைச் செயலாளரும், அரூர் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் திரு.சி.செல்லதுரை அவர்களையும், திருவண்ணாமலை வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளரும், பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் திரு.எவரெஸ்ட்.என். நரேஷ்குமார் அவர்களையும் அறிமுகப்படுத்த உள்ளார்கள். அதுசமயம் மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: 1. வாக்காளர் சேர்த்தல் நீக்கல் 2. வாக்குச்சாவடி முகவர்கள் (BLA 2) மற்றும் வாக்குச்சாவடி குழு(BLC) சரிபார்த்தல்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்புக்கு இணங்க, கழக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின் பேரில் மதுரை மாட்டுத்தாவணி எம்.ஜி.ஆர் பேருந்து நிலையத்தில் போக்குவரத்து துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் திடீர் ஆய்வு மேற்கொண்டு பயணிகளிடம் குறைகளை கேட்டு அதிகாரிகளுக்கு பல்வேறு ஆலோசனைகள் வழங்கினார். உடன் மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. மற்றும் அதிகாரிகள், கழகத்தினர், பொதுமக்கள் உள்ளனர்.

நெல்லை மத்திய மாவட்டம் மானூர் கிழக்கு ஒன்றியச் செயலாளர் கூ.அருள்மணி ஏற்பாட்டில் கங்கைகொண்டான் அனைத்தலையூரில் நடைபெற்ற மாநில அளவிலான மகளிர் மின்னொளி கபாடி போட்டி நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான் தலைமையில் நடைபெற்றது. உடன் மாநில வர்த்தக அணி இணை செயலாளர் மாலை ராஜா, மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் நெல்லை தொகுதி பார்வையாளர் ச.முத்துச்செல்வி, முன்னாள் மாவட்ட துணைச் செயலாளர் ஆ.கா.மணி, தெற்கு ஒன்றிய செயலாளர் மாரியப்பன் உள்பட கழகத்தினர் பலர் உள்ளனர்.